அவையினுடைய இதர அலுவ. ள் பூராவும் இப்படித்தான் தடை செய்யப்பட வேண்டுமா? இதற்குத் தொடர்ந்து நீங்கள் அனுமதி கொடுக்கப்போகிறீர்கள என்பதை நான் அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெளிநடப்புச் செய்வதை நான் எப்படித் தடை செய்ய முடியும்?

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: பேரவைத் தலைவர் அவர்களே, தங்களுடைய தீர்ப்பை ஏற்றுக் கொள்வதும், ஏற்றுக் கொள்ள முடியாமல் இருப்பதும் அவரவர்களுடைய நிலைமை. ஆனால் அவைக்குள் தங்கள் தீர்ப்பை எதிர்ப்பதாகவோ, கண்டிப்பதாகவோ கூறுவது அவை மரபல்ல. தங்கள் தீர்ப்பைக் கண்டித்து நாங்கள் வெளிநடப்புச் செய்கிறோம் என்றுதான் எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் சொன்னார்கள். இனி ஒரு முறை அப்படிச் சொல்வதற்கு இடம் இல்லாத நிலையேற்பட வேண்டும். தங்களுடைய தீர்ப்பைப் பற்றி விமர்சிக்கிற உரிமை யாருக்கும் இல்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஏற்கெனவே பாராளுமன்றத்திலும், வேறு சட்டமன்றங்களிலும் இது பற்றிய தெளிவான தீர்ப்பு வழங்கப்பட்டிருக்கிறது. பேரவைத் தலைவருடைய தீர்ப்புகளைக் கண்டித்தோ அல்லது உள் நோக்கம் கற்பித்தோ, களங்கம் கற்பித்தோ நடந்து கொண்டால் அவ்வுறுப்பினர்கள் அவையிலிருந்து வெளியேற்றப்பட நேரிடும் என்பதுதான் தீர்ப்பு. எனவே எல்லா உறுப்பினர்களும் இதைக் கவனமாக வைத்துக் கொள்ள வேண்டும். பேரவைத் தலைவர் என்றைக்காவது ஒரு நாள் அப்படிச் செயல்படுவது தவிர்க்க முடியாமல் ஆகிவிடும் என்பதை அனைவருக்கும் உணர்த்த விரும்புகிறேன்.

TRUTH ALONE TRIUMPHS

1. தகவல் கோரல்—தொடர்ச்சி

(ஆ) அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பெற்ற செய்திகளைத் தொலைக்காட்சியில் ஒளிபரப்பியது குறித்து.

திரு. பி. எச். பாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாள்தோறும் பத்திரிகைகள் இதற்குத் தான் முக்கியத்துவம் கொடுக்கின்றன. பேசுபவர்களைப் பற்றிப் பத்திரிகைகளிலே வரவில்லை. நேற்று நான் டி.வி. செய்தியைக் கேட்டேன். 8.40-க்கு, ‘பட்ஜெட் பொது விவாதம் நடந்தது.’ அவ்வளவுதான். யார், யார் பேசினார்கள் என்று பெயர்களைச் சொல்லவில்லை. ஆனால் வெளி

நடப்புக்கு அவ்வளவு முக்கியத்துவம். பிறகு 9.30-க்குக் கேட்டேன், ஆங்கிலத்தில். இப்போது கிளப்பினார்களே சற்று முன்பு, அதைச் சொன்னார்கள். ஆக எந்த அளவுக்குத் திட்டமிட்டு ஒரு கூட்டம் இதற்காகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதை நான் உணர்ந்த காரணத்தால் தான் சொல்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : பேரவைத் தலைவர் அவர்களே, அதுமாத்திரமல்ல. டி.வி.யில் செய்தி சொல்லும்போது நீங்கள் அவைக் குறிப்பிலிருந்து எதை எதை எல்லாம் நீக்கினீர்களோ அவைகளை எல்லாம் கூட டி.வி. செய்தியிலே சொல்லியிருக்கிறார்கள். அது உரிமைப் பிரச்சினையின்பால் வரக் கூடிய ஒன்றாகும் என்பதை நினைவூட்டுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது குறித்துக் கவனித்து, உரிமை மீறல் பிரச்சினை குறித்துத் தொலைக் காட்சிக்கு எழுதித் தக்கவாறு என்னுடைய தீர்ப்பைப் பின்னர் அறிவிக்கிறேன்.

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதல்வர் அவர்கள் அன்று பேசுகிறபோது குறுக்கிட்டு.........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒழுங்குப் பிரச்சினை என்பது இப்போது நடைபெறுகிற அலுவல் தொடர்பாக மட்டும்தான் வரலாம். (குறுக்கீடு)

(முற்பகல் 9-10)

3. வரவு-செலவுத் திட்டம், 1989-90—பொது விவாதம்—தொடர்ச்சி

*திரு. ந. நஞ்சப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்களால் அவையில் வைக்கப்பட்ட நிதிநிலை அறிக்கையினை கவனமாக ஊன்றிப் படித்தேன். இந்தியப் பொதுவுடைமைக் கட்சியின் சார்பில் எங்களது கருத்தினைத் தெரிவிக்க விழைகிறேன்.

நீண்ட இடைவெளிக்குப் பின்னால் ஆட்சிப் பொறுப்பேற்று இந்த அறிக்கை வைக்கப்பட்டிருக்கிறது. பொருளாதார ரீதியில் பல்வேறு விமர்சனங்கள் இருப்பினும், மாறுபட்ட கருத்துக்கள் இருப்பினும் ஏழையெளிய மக்களுக்கு, அடித் தட்டில் இருக்கும் மக்களுக்கு பல திட்டங்கள் குறிப்பிடப் பட்டுள்ளதை நான் வரவேற்கிறேன்.